செ.வெ.எண் : 666 நாள் : 06.12.2024

**திருநெல்வேலி மாவட்டம்**

**8வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா 2025 ஜனவரி மாதத்தில் நடைபெறுவது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், தன்னார்வலர்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (06.12.2024) 8வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழாவினை 2025 ஜனவரி மாத இறுதி வாரத்தில் நடத்துவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள், மற்றும் இலக்கிய அமைப்பினர் கலந்து கொண்டனர்.

8வது பொருநை புத்தகத் திருவிழாவை நெல்லை வர்த்தக மையத்தில் நடத்திட தீர்மானிக்கப்பட்டது. புத்தகத் திருவிழாவின் போது இளைஞர் இலக்கிய திருவிழா மற்றும் கலைத் திருவிழாவும் நடத்தப்பட உள்ளது. புத்தகத் திருவிழாவில் நூல் வெளியிட விரும்பும் எழுத்தாளர்கள் தங்களது நூல் பிரதிகளை 31. 12. 2024 தேதிக்கு முன்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வழங்கிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

புத்தகத் திருவிழாவிற்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள போட்டிகளில் பெருமளவிலான மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. புத்தகத் திருவிழாவில் நிகழ்ச்சி தொகுப்பு, ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் கல்லூரி மாணவர் வாசகர் வட்ட மாணவர்களுக்கு பெருமளவில் வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சரவணன் அவர்கள், மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திரு.இலக்குவன் அவர்கள், சமூக பாதுகாப்பு திட்ட தனிதுணை ஆட்சியர் திருமதி.ஜெயா அவர்கள், வட்டாட்சியர் (அரசு கேபிள் டிவி) திரு.செல்வம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பல்வேறு இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**